தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 26-8-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

### மாநிலத்தின் கடந்த வார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 31°செ முதல் 38°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 22°செ முதல் 27°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 16°செ முதல் 22°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 11°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் ஒரு சில இடங்களில் இலேசான மழை காணப்பட்டது.

### வானிலை முன்னறிவிப்பு மற்றும் அறிவுரைகள் (26.08.2015 முதல் 30.08.2015)

**1. மேற்கு மண்டலம்**

மேற்கு மாவட்டங்களான கோயமுத்தூரில் வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 81-85 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 62-66 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 15 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் ஐந்து நாட்களுக்கு இலேசான தூறல் மழை எதிர்பார்க்கபடுகிறது.
- ✓ தற்போது வானம் அதிக மேகமூட்டத்துடன் காணப்படுவதால் குறுவை நெற்பயிருக்கு மேலுரமாக நைட்ரஜனை மண்ணில் இட்டால் பலன் தராது. எனவே 1 சதவீதம் யூரியாவை இலைவழி ஊட்டமாக தெளிக்கவும்.
- ✓ தற்போது வானம் அதிக மேகமூட்டம் மற்றும் அதிக காற்றின் ஈரப்பதமும் கொண்ட காரணத்தால் மஞ்சளில் நுண்ணூட்டச்சத்து குறைபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே 25 நாட்கள் இடைவெளியில் இரண்டு முறை போராக்ஸ், பெரஸ்சல்பேட், ஜிங்சல்பேட் மற்றும் யூரியாவை ஆகியவற்றை ஒவ்வொன்றும் ஒரு எக்டருக்கு 375 கிராம் என்ற அளவில் 250 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- ✓ குளிர் கால கம்போடியா பருத்தி விதைப்பைத் தொடரவும்.
- ✓ தற்போது நிலவும் வானிலையால் கால்நடைகளுக்கு சுத்தமான குடி நீர் அளிக்கவும்.

**2. காவிரி டெல்டா மண்டலம்**

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை $33^0$செ முதல் $35^0$செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°செ முதல் 26°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 44 முதல் 78 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 8 கி.மீ முதல் 12 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது

**வேளாண் அறிவுரை**

- ✓ சம்பா வயல்களில் நேரடி விதைப்பு செய்யும் முன் விதைகளை சூடோமோனாஸ் என்ற எதிர் உயிரியினை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைக்கவும். இதனால் விதைகளின் முளைப்புத்திறன் மற்றும் வீரிய தன்மை அதிகரிக்கும். விதைகள் மூலம் பரவக்கூடிய நோய் கிருமிகள் அழிந்து விடும்.
- ✓ சம்பா நாற்றாங்கால் தயார் செய்ய ஏக்கருக்கு 8 சென்ட் பாத்தியில் 400 கிலோ நன்கு மக்கிய தொழு உரம் அல்லது கம்போஸ்ட் கலந்து இட்டு நாற்றாங்கால் தயார் செய்யவும். சம்பா நாற்றாங்காலில் ஒரு சென்ட்க்கு 2 கிலோ வீதம் டீ.ஏ.பி மேலுரமாக இடவேண்டும்.
- ✓ நேரடி விதைப்பு செய்த நெல் வயல்களில் பயிர் முளைத்த 3-4 தினங்களுக்குள் ஏக்கருக்கு பென்டிமெத்தலின் 1 லிட்டர் அல்லது பிரிடிலாக்குளோர் + சேப்னர் (சோபிட்) 500 மிலி என்ற

அளவில் விதை முளைக்கப் போதுமான மழை பெய்த உடனேயே தெளித்துக் களையைக் கட்டுப்படுத்தலாம்.

**3. தெற்கு மண்டலம்**

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 35°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை $25^0$செ முதல் $27^0$செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 48 முதல் 78 சதவிகிதமாகவும், பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 2 கி.மீ முதல் 12 கி.மீ வேகத்திலும் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் தினங்களில் வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் முதிர்ச்சி பருவத்திலுள்ள நெற்பயிரை அறுவடை செய்யவும். 80 சத கதிர்கள் மஞ்சள் நிறமடைதல் மற்றும் மிகவும் முதிர்ச்சியடைந்த தூரின் கதிரின் அடிப்பகுதியில் உள்ள பெரும்பாலான மணிகள் கடினத்தன்மையுடன் காணப்படுதல் ஆகியவை பயிர் அறுவடைக்கு தயாராக உள்ளதை குறிக்கும். அறுவடை செய்து, கதிரடித்து, மணிகளை தூற்றி பின்பு 12 சத ஈரப்பதத்திற்கு உலரவைத்து சேமிக்கவும்.

- ✓ தக்காளியில் பூக்கும் மற்றும் காய்க்கும் பருவம் முக்கியமான பருவமாதலால் சொட்டு நீர்ப்பாசனம் மூலம் 3 நாட்களுக்கு ஒரு முறை ஒரு எக்டருக்கு 12- 61 - 0 உரம் 1.14 கிலோ 13- 0- 45 உரம் 6.17 கிலோ மற்றும் யூரியா 2.8 கிலோஎன்ற அளவில் அளிக்கவும்.

- ✓ மிளகாயில் காய்ப்பிடித்தலை மேம்படுத்த என். ஏ. ஏ. (NAA) என்ற வளர்ச்சி ஊக்கியை ஒரு லிட்டருக்கு 10 மில்லி கிராம் என்ற அளவிலும் டிரையாகான்டனால் என்ற வளர்ச்சி ஊக்கியை 1.25 மில்லி கிராம் என்ற அளவிலும் கலந்து தெளிக்கவும்.

- ✓ வாழையில் முக்கியமான பருவமான குலை தள்ளும் பருவத்தில் களைகளை கட்டுப்படுத்துதல் மற்றும் பக்கக்கன்றுகளை அகற்றுதல் ஆகியவை மிக இன்றியமையாதவையாகும். மண்ணில் காற்றோட்டத்தை மேம்படுத்துவதற்காக மண்வெட்டி கொண்டு மண்ணை கிளறிவிட்டு பின்பு மண் அணைக்கவும். சொட்டு நீர்பாசனம் மூலமாக மரத்திற்கு நாள் ஒன்றுக்கு 20 லிட்டர் என்ற அளவில் நீர்ப்பாசனம் செய்யவும்.

**4. மலைப்பிரதேச மண்டலம்**

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை

*20°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 12°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 88 முதல் 92 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 7 கி.மீ வேகத்திலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

**வேளாண் அறிவுரை**

- ✓ *மாவட்டத்தில் அடுத்த ஐந்து நாட்களுக்கு லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது.*
- ✓ *வரும் வாரத்தில் வரக்கூடிய மழையை பயன்படுத்தி, உருளை கிழங்கு பயிரில் விதைப்பின் போதும் 30ஆம் நாளிலும் 130 கிலோ யூரியா, 660 கிலோ சூப்பர் பாஸ்பேட் இடவேண்டும்.*

**5.வடமேற்கு மண்டலம்**

*வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்க்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 33°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 70 முதல் 85 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகமானது 5 கி.மீ முதல் 8 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

**வேளாண் அறிவுரை**

- ✓ *தென்மேற்குப் பருவமழையின் தாக்கம் தற்காலிகமாக குறைந்துள்ளதால் வானிலை லேசான மேகமூட்டத்துடன் மழையற்ற தன்மையும் கொண்டதாக இருக்கும். இதனால் குறைந்த வெப்ப அளவுகள் மீண்டும் அதிகரித்துக் காணப்படும். தீவன எடுப்பும், இயல்பை ஒட்டியோ அல்லது சற்று குறைந்தோ காணப்படும்.*
- ✓ *ஆடி புரட்டாசிப் பட்டத்தில் மானாவரியில் தீவனச்சோளம் சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள் மறுதாம்பு தீவன சோளமான கோ.எப்.எஸ்.29 தீவன சோளத்தை விதைப்பு செய்யலாம், வரிசை நடவிற்கு ஏக்கருக்கு 2கிலோ விதையும் தெளிப்பு செய்வதற்கு 4கிலோ விதையும் தேவைப்படுகிறது, இந்த இரகம் வறட்சியினைத் தாங்கி வளர்வதுடன் பசுந்தீவனம் மற்றும் உலர்தீவனமாகவும் பயன்படுத்தலாம்,*

**6. வடகிழக்கு மண்டலம்**

*அடுத்து வரும் ஐந்து நாட்களிலும் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 34°செ முதல் 35°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24°செ முதல் 26°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 62 முதல் 90*

*சதவிகிதமாகவும், காற்றின் வேகம் **3** கி.மீ முதல் **6** கி.மீ வரையிலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

***வேளாண் அறிவுரை***

- ✓ *மழை எதிர்பார்க்கப்படுவதால் கால்நடை குடில்களின் அருகில் நீர் தேங்குவதை தவிர்ப்பதன் மூலம் நோய் பரப்பும் பூச்சிகள் உருவாவதை தடுக்கலாம்.*
- ✓ *புதியதாக வளர்ந்த புற்களை இளம் கன்றுகள் மேயும்போது கழிசல் ஏற்பட வாய்ப்புள்ளது. அத்தருணத்தில் அருகில் உள்ள கால்நடை மருத்துவரை அணுகி அதற்கு தேவையான மருந்தினை அளிக்க வேண்டும்.*
- ✓ *நெல்லில் பாக்டீரியா இலை அழுகல் நோயைக் கட்டுப்படுத்த **2.5** கிராம் காப்பர் ஹைட்ராக்சைடு ஐ **1** லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.*
- ✓ *காய்கறிகளில் தென்படும் இலைக்கோட்டு நோயைக் கட்டுப்படுத்த **5** சதவீத வேப்பம் விதைச்சாறு தெளிக்கவும்.*

***7.அதிக மழை பெறும் மண்டலம்***

*வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிது. பகல்நேர வெப்பநிலை **$33^0$**செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை **$24^0$**செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் **90** முதல் **92** சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு **16** கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

***வேளாண் அறிவுரை***

- ✓ *வரும் நாட்களில் போதுமான மழை இல்லாத காரணத்தினால் புதிதாக நடப்பட்டுள்ள கன்றுகள் காய்ந்து விடாமல் இருக்க குழாய் மூலம் நீர் பாசனம் செய்து பாதுகாக்கவும்.*
- ✓ *வறண்ட வானிலை காரணத்தினால் அறுவடைக்கு தயராக உள்ள கிராம்பினை அறுவடை செய்து பிரித்து எடுக்கவும்.*

***<u>தகவல்</u>***

*பேராசிரியர் மற்றும் தலைவர்,*
*வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்,*
*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,*
*கோயம்புத்தூர் – **641 003.***

*உதவி மக்கள் தொடர்பு அலுவலர்*